**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மூலதன மானியமாக கிடைத்த ரூபா 32,420,000 தொகை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது அலுமினியம் அலுமாரிகளை பொருத்துவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,481,639 தொகை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்குவதற்கு பதிலாக வருமான செலவினமாக இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டமையால் நடப்பாண்டின் இலாபம் மற்றும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அப்பெறுமானத்தால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் இந்த செலவினங்களை மூலதனமாக்கி கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன மற்றும் வருமான செலவினங்களை சரியான இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 135,279,060 ஆக இருக்க வேண்டிய போதிலும், மூலதன மானியம் ரூபா 35,132,366 மற்றும் காலக்கழிவு ரூபா 3,741,444 மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் பிழையாக முறையே செலவு மற்றும் வரவு வைக்கப்பட்டதன் காரணமாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 31,390,922 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த தவறின் காரணமாக மூலதன மானியக் கணக்கு ரூபா 35,132,366 குறைத்தும் பிற்போட்ட வருமானக் கணக்கு ரூபா 3,741,444 அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிகார சபைக்குரிய கட்டிடத்தை மீள்மதிப்பீடு செய்த சந்தர்ப்பம் வரையில் முழுமையாக பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் மீள்மதிப்பீட்டின் பின்னர் வருடாந்த பெறுமானத் தேய்வுகளுக்கு ஒப்பாக மூலதன ஒதுக்கங்களின் போது ஏற்படுகின்ற பிரச்சினையான நிலைமைகளை குறைக்கும் நோக்கில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கீற்குரிய சீராக்கங்கள் மாத்திரம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டு முதல் வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த கணக்காளர் 2022 ஆம் ஆண்டில் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டதன் காரணமாக அவருக்கு நிலுவை சம்பளமாக ரூபா 8,781,059 தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கான நிதிஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த செலுத்த வேண்டிய நிலுவை சம்பள தொகையில் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 4,027,143 தொகை நிறுத்தி வைக்க்பபட்ட இலாபத்தில் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாண்டின் செலவினமாக சீராக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மேலும் செலுத்த வேண்டிய ரூபா 4,753,916 ஆன நிலுவை சம்பளத்திற்கு உரிய நிதிக் கூற்றுக்களில் ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் படி இந்த உத்தியோகத்தர் தொடர்பாக உரிய வழக்கின் பிரதியொன்றை பெற்றுக்கொண்டதன் பின்னர் 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளுக்குரிய சீராக்கங்கள் நடப்பாண்டு இலாபத்தில் சீராக்க முடியாதிருந்ததுடன், எதிர்கால கடப்பாடுகளுக்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாப கணக்கு | 1,289,179 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் ரூபா 1,289,179 தொகை தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக ஒரு இறுதிக் கணக்கு தயாரிக்கப்பட்டமையால் நிதியத்தின் மற்றும் அதிகார சபையின் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் போது பிரச்சினையான நிலைமை ஏற்பட்டிருந்தமை பல்வேறு சந்தர்ப்பங்களின் போது அவதானிக்கப்பட்டது. இந்த பிரச்சினைகள் தொடர்ச்சியாக பேணிச் செல்லுதல் பொருத்தமற்றதாக இருந்தமையால் இவ்வாறு சீராக்கங்கள் செய்து சரிசெய்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிறுத்தி வைக்கப்பட்ட இலாப கணக்கிற்கு இடையிலான வேறுபாட்டிற்கான காரணங்களை குறிப்பாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் போது செயல் நடவடிக்கைத் திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட முற்பணங்களின் கூட்டு மொத்தம் ரூபா 1,789,090 அதாவது 54 சதவீதம் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | அதிகார சபையின் பிரதான அலுவலகத்தின் கணக்கு பிரிவிற்கு பட்டியல்கள் மற்றும் நிலுவைப் பணம் தபால் மூலம் அனுப்புதல் தொடர்பாக ஏதாவது தாமதம் ஏற்பட்டமையால் வரவு செலவு திட்ட சுற்றறிக்கை 08/2022 இன் மூலம் அரசாங்க நிறுவனங்களினால் விழாக்களுக்காக செய்யப்படுகின்ற செலவினங்களை கைவிடல் மற்றும் ஏனைய நடைமுறை விடயங்களின் காரணமாக திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் 2022 ஆம் ஆண்டின் போது நடத்துவதற்குரிய இயலுமை காணப்படவில்லை. | வழங்கப்பட்டுள்ள முற்பணம் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளைச் செய்து அந்த பணிகளை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமானங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104 | 2021 ஆம் ஆண்டில் பொருள் மெய்மெய்யாய்வில் இனங்காணப்பட்ட தொலைந்து போன லெப் டொப் கணனி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தொலைந்து போன லெப் டொப் கணனியின் பெறுமதி தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை வழங்குமாறு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371 | (i) எந்தவொரு விஷேட பணிகளுக்காகவும் பதவி நிலை தரத்தில் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 ஆகக் கூடிய வரை செயல் நிமித்த உப கட்டுநிதி வழங்க முடியுமாக இருந்த போதிலும், அந்த எல்லையினை விஞ்சி 06 சந்தர்ப்பங்களின் போது கூட்டுமொத்தமாக ரூபா 941,900 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | தவிர்க்க முடியாத அவசர சந்தர்ப்பங்களின் போது மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்காக இந்த முற்பணம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் முகாமைத்துவம் செய்து ரூபா 100,000 இனை விஞ்சிய முற்பணங்களை வழங்காதிருப்பதற்கு சகல பிரிவுகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | விநியோகிக்கப்பட்ட கட்டுநிதிகளை தீர்த்து வைத்தல் அது வழங்கப்பட்ட நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு மேல் தாமதிக்க முடியாதிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டின் போது 107 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 2,103,641 கூட்டுத் தொகையான முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த பிரச்சினைகளை குறைப்பதற்காக பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்தின் அடிப்படையில் புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்தி 2023 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுகின்றது. அதனால் இந்த பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கும் என எதிர்பார்க்கின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 10,255,584 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 826,262 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,429,322 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு முன்னைய ஆண்டின் சீராக்கம் நடப்பாண்டின் இலாபத்தில் சீராக்கப்பட்டமை, மூலதன செலவினம் வருமான செலவினமாக சீராக்கப்பட்டமை, மீளாய்வாண்டின் பணிக் கொடை ஏற்பாடுகள் கவனத்தில் கொள்ளக் கூடிய பெறுமதியைக் கொண்டிருந்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் ரூபா 1.2 மில்லியன் செலவில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட தரவு முறைமையை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. அதனால் 2021 ஆம் ஆண்டின் போது புதிய தேசிய தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்காக இலங்கை டெலிகொம் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அதன் மொத்த கிரயம் ரூபா 1,403,255 ஆகும். இதன் காரணமாக பழைய தரவு முறைமைக்காக | யுனிசொப் நிறுவனத்தின் மானியமாக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அந்த முறைமையின் வழங்கல் நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டமையினால் அதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.2 மில்லியன் கொடுப்பனவு யுனிசெப் நிறுவனத்தினால் நேரடியாக கொழும்பு பல்கலைக்கழத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த தரவு முறைமையை பயன்படுத்துதல் தொடர்பாக | திட்டங்களுடன் செயற்திட்டத்தை அமுல்படுத்தி நிதி வளங்கள் விரையமாவதை தடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவிடப்பட்ட ரூபா 1.2 மில்லியன் தொகையும் பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | எடுக்கப்பட்ட முயற்சியின் இறுதியில் அதிகார சபையின் கட்டுப்பாட்டிற்கு புறம்பான நிலைமை ஏற்பட்டதன் காரணமாக அது தொடர்பாக பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு அனுப்பபட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் இலங்கை டெலிகொம் நிறுவனத்துடன் புதிய தரவு முறைமையொன்றை தயாரிப்பதற்காக 2021.06.17 ஆம் திகதி நடாத்தப்பட்ட 205 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | |

**3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் பணிகளுக்காக மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஈடுபட்டவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் எடுக்கப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளுக்காகவும் 2010 ஆம் ஆண்டின் போது தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்ட போதிலும், 2018 ஆம் ஆண்டின் போது நிதியத்தின் நிதி உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செலவிடப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் நிதியத்தில் ரூபா 2,905,500 மீதி காணப்பட்டது. | தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியினை எதிர்பார்த்த நோக்கங்களுக்காக ஈடுபடுத்துதல் தொடர்பாக உயர் முகாமைத்துவத்தால் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது இந்த நிதியத்தை பயன்படுத்துவதற்கு அவகாசம் கிடைத்திருக்கவில்லை. எனினும், நிதியத்தின் செயற்பாடுகளை முறைமைப்படுத்துவதற்கு வழிகாட்டியொன்றை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ளது. | நிதியத்தின் இலக்கினை நிறைவேற்றுவதற்கு நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பயன்பாட்டிற்காக 2014 ஆம் ஆண்டு முதல் வாய் மொழி மூலம் கையளிக்கப்பட்ட | இந்த கட்டிடத்தை முல்லைத்தீவு வைத்தியாசாலைக்கு கையளிப்பதற்கும் அதன் ஒரு பகுதியை | கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு நடடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | முல்லை தீவு மாவட்ட செயலகத்திற்குரிய கட்டிடம் அறிக்கை திகதி வரையிலும் எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பயனற்று காணப்பட்டதுடன், பாதுகாப்பு சேவையினை பெற்றுக் கொள்வதற்காக மீளாய்பவாண்டின் போது ரூபா 865,680 செலவிடப்பட்டிருந்தது. | துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்ற பிள்ளைகளின் காணொளி சான்றுகளை பதிவசெய்வதற்கான அலகை பேணிச் செல்வதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தமையும், எனினும் அரச செலவினங்கள் வரையறுக்கப்பட்டமையினால் உரிய விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது 30 வருடங்கள் குத்தகை காலத்திற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு அடுத்தாலுள்ள காணி ரூபா 18,317,757 பெறுமதியில் குத்தகைக்கு பெறப்பட்டிருந்த போதிலும், அந்த காணி இது வரையிலும் எந்தவொரு பணிகளிலும் ஈடுபடுத்தப்படாமல் பயனற்ற காணப்பட்டது. | இந்த வளங்களை செயற்திறனாக பயன்படுத்துதல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், இதற்காக அமைச்சிலிருந்து நிதி ஏற்பாடு கோரப்பட்ட போதிலும், நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் உதவி முகாமையாளர் (நிகழ்ச்சித் திட்டம்) 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து வெளி நிறுவனங்களுக்காக விடுவிக்கப்பட்டதன் காரணமாக அந்த பதவி மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது. | இந்த உத்தியோகத்தர் விகித்த பதவிக் காலம் முடிவடைந்ததன் காரணமாக மீண்டும் அதிகார சபையின் உள்ளபடியான பதவிக்கு அறிக்கையிட்டிருந்தார். மீண்டும் அந்த அமைச்சு அமைக்கப்பட்ட பின்னர் மீண்டும் நிதி, பொருளாதார கட்டமைப்பு, தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் கட்டளையின் அடிப்படையில் 2022.09.15 ஆம் திகதி இந்த உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டிருந்தார். | மனித வள முகாமைத்துவம் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் அங்கீகாரிக்கப்பட்ட பதவியணியினர் 618 ஆக இருந்த போதிலும், அதில் 287 உத்தியோகத்தர்கள் 46 சதவீத பதவியணியினரில் வெற்றிடம் காணப்பட்டது. அதில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முக்கியமான பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுகின்ற பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 148 பேர்களின் வெற்றிடம் 2021 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்றது. அதன் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் இவ்வாறு கணிசமான மனித வளங்கள் பற்றாக்குறை காணப்பட்டமை அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது. | வெற்றிடமான பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்து விலகியமை மற்றும் புதிய பதவிகளை ஏற்படுத்தியமை காரணமாக பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டிருந்ததுடன், விஷேட அங்கீகாரத்தின் கீழ் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளல், பதிற்கடமை அடிப்படையில் நியமித்தல் மற்றும் வெற்றிடமாக உள்ள 17 பதவிகளை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. | மனித வள முகாமைத்துவம் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஒக்டோபர் 29 ஆம் திகதி அங்கீகாரம் கிடைத்த சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்குரிய ஐந்து வருட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஐந்து வருட செயல் நடவடிக்கைத் திட்டம் அமைச்சுக்கு அனுப்புவதற்காக இறுதி கட்டத்தில் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையை அமுல்படுத்துதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 2021 சனவரி 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை 10 கிடைத்த முறைப்பாடுகளில் 10,691 அதாவது 47 சதவீதம் தீர்வு காணப்படாத முறைப்பாடுகளாக காணப்பட்டதுடன், புலனாய்வு | முறைப்பாடொன்றின் இறுதி நடவடிக்கைகளை எடுத்தல் முறைப்பாட்டின் வடிவத்தின் பிரகாரம் மாறுபடுவதுடன், முறைப்பாட்டு விசாரனைப் பணிகள் அல்லது வழக்கு | தீர்வு காணப்படாத முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவு, உளவியல் சமூக பிரிவு மற்றும் சட்ட பிரிவுகளுக்கு கிடைத்த முரைற்பபாடுகளுக்கு இடையே 50 சதவீத்திற்கு அதிகமான அளவு விசாரனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் துஷ்பிரயோகம் மற்றும் உடலியல் முறைப்பாடுகள் 10497 கிடைத்திருந்த போதிலும், அதில் 6731 துஷ்பிரயோகங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இறுதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் முடிவடையாமையின் அடிப்படையில் உரிய முறைப்பாடுகளை முடிவுறுத்திய முறைப்பாடுகளாக கருதாமையினால் தொடர்ந்தும் விசாரணைகள் நடாத்தப்படுகின்ற முறைப்பாடுகளாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது, | வேண்டும். |
| (இ) | தீவிரமான, ஆபத்துடன் கூடிய, ஆபத்திற்கு உட்படக் கூடிய சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுகின்றகளுக்காக கல்விசார் உதவிகள் அல்லது உரிய உதவிகளை பெற்றுக் கொள்வதற்காக 1000 சிறுவர்களை இலக்காகக் கொண்டு மீளாய்வாண்டின் போது ரூபா 4,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 417 சிறுவர்களுக்காக ரூபா 1,514,000 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவிகள் 1929 முறைப்பாடுகளில் இனங்காணப்படுகின்ற கல்விசார் நிதி உதவியின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுவதுடன், 2022 ஆம் ஆண்டின் போது அந்த முறையில் பரிந்துரை கிடைத்த 417 சிறுவர்களுக்காக மாத்திரம் இந்த நிதி உதவி அனுப்பப்பட்டிருந்தது. | இலக்கிடப்பட்ட நலனாளிகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதி உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |